MAR 2008

1309

Register Number | | | | | |

# தமிழ் - இரண்டாம் தாள்
# Language – Part A – TAMIL – Paper II

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடை தருக : $5 \times 1 = 5$

1. பாடம் என்னால் படிக்கப்பட்டது.

( செய்வினை வாக்கியமாக மாற்றுக )

2. உழைப்பு இல்லாதவர்க்கு உயர்வு உண்டோ ?

( செய்தி வாக்கியமாக மாற்றுக )

3. காலையில் எழுவதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்

( கட்டளை வாக்கியமாக்குக. )

4. தாய் உணவு உண்டாள்.

( பிறவினை வாக்கியமாக மாற்றுக. )

5. இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை.

( உடன்பாட்டு வாக்கியமாக்குக )

6. நேற்று பெருமழை பெய்தது; ஏரியில் நீர் நிரம்பியது.

( கலவை வாக்கியமாக்குக. )

7. ஆசிரியர், 'நீங்கள் நாட்டுப் பற்றுடன் வளர வேண்டும்' என்று மாணவர்களிடம் கூறினார்.

( அயற்கூற்று வாக்கியமாக மாற்றுக. )

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்கள் **அனைத்திற்கும்** விடையளிக்கவும். 5 × 1 = 5

8. ஏதேனும் *ஒன்றனுக்கு* மட்டும் பொருள் விளங்க சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

அ) "தாயைக் கண்ட சேயைப் போல"

ஆ) "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்"

இ) "முதலைக் கண்ணீர்".

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

எகனெ மொகனெயாப் பேசாதே

10. மரபுப் பிழை நீக்கி எழுதுக :

கோழி கத்த மயில் கூவியது

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

வில்லேஜ் லைப்தான் மகிழ்ச்சியாக இருக்கிறது.

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக :

அடடா இசை கேளாத செவிகளா இவை இசை நுகராத செவிகட்கு என்பாடல் இனிக்காதே சரி இருக்கட்டும்.

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 = 6

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக. ( ஒன்றனுக்கு மட்டும் )

அ) அளித்தல் ஆ) கண்ட.

14. பிரித்து எழுதுக.

அ) தந்நோவார் ஆ) சிறுபடை.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்பு தருக. ( இரண்டனுக்கு மட்டும் )

அ) வருநிதி

ஆ) அருமையே அருமையே

இ) கருநிறம்.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 20 × 1 = 20

16. இரண்டு மாத்திரை அளவு பெறும் எழுத்து

அ) உயிர்க்குறில்

ஆ) உயிர்மெய்

இ) உயிரளபெடை

ஈ) உயிர் நெடில்.

17. குற்றியலுகரத்தில் வரும் மொழியின் முதல் எழுத்து ..................... ஆகும்.

அ) உ ஆ) இ

இ) ய ஈ) எ.

18. செய்யுளில் ஒரு சொல் அளபெடுப்பதால் வினையெச்சமாக மாறும் அளபெடை ................ .

அ) ஒற்றளபெடை ஆ) சொல்லிசை அளபெடை

இ) இசைநிறை அளபெடை ஈ) உயிரளபெடை.

19. மொழி, பதம், சொல் என்பன போல், இதே பொருள் தரும் வேறு சொல்

அ) குழவி ஆ) கிளவி

இ) கிலவி ஈ) கிழவி.

20. வைகை என்பது ..................... க்கு எடுத்துக்காட்டாகும்.

அ) தனி மொழி ஆ) தொடர் மொழி

இ) பொது மொழி ஈ) செம்மொழி.

21. மணி, நாள், மாதம், ஆண்டு என்பவை .....................

அ) பொருட்பெயர் ஆ) தொழில் பெயர்

இ) காலப்பெயர் ஈ) இடப்பெயர்.

22. நிரை அசை என்பது

அ) குறில் நெடில் இணைந்து வருவது

ஆ) நெடில் குறில் இணைந்து வருவது

இ) குறில் மெய் இணைந்து வருவது

ஈ) மெய்யும் நெடிலும் இணைந்து வருவது.

23. ஒரு விரலைக் காட்டி சிறிதோ, பெரிதோ ? என வினவுவது

அ) விடை வழு ஆ) மரபு வழு

இ) வினா வழு ஈ) கால வழு.

24. பாம்பு! பாம்பு என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) ஒருபொருட் பன்மொழி

இ) அடுக்குத்தொடர் ஈ) ஒன்றொழிப் பொதுச்சொல்.

25. 'கத்தும் குயிலோசை காதில் விழவில்லை' - இதில் உள்ள வழு .............. .

அ) மரபு வழு ஆ) வழா நிலை

இ) திணை வழு ஈ) பால் வழு.

26. ஔகாரம் மொழிக்கு .............. மட்டும் வரும்.

27. நிலை மொழியும், வரு மொழியும் சேரும் போது எந்தவித மாறுபாடும் இல்லாமல் சேர்வது

அ) இயல்புப் புணர்ச்சி ஆ) விகாரப் புணர்ச்சி

இ) பண்புப்பெயர் புணர்ச்சி ஈ). குற்றியலுகரப் புணர்ச்சி.

28. சிலேடை அணியில் ஒரு சொல் பிரியாமல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது .............. .

அ) செம்மொழிச் சிலேடை ஆ) இரட்டுற மொழிதல்

இ) பிரிமொழிச் சிலேடை ஈ) அடுக்குத்தொடர்.

29. காடும், காடு சார்ந்த இடமும் .............. நிலம் ஆகும்.

30. புறத்திணைகள் .............. வகைப்படும்.

31. நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர்

அ) தேமாங்கனி ஆ) புளிமாங்கனி

இ) கூவிளங்கனி ஈ) கருவிளங்காய்.

32. பொருத்துக:

அ) நிரை கவர்தல் — கரந்தை

ஆ) எயில் காத்தல் — வெட்சி

— நொச்சி.

33. காய் முன் நிரை வருவது ................ ஆகும்.

அ) வெண்சீர் வெண்டளை ஆ) கலித்தளை

இ) ஒன்றாத வஞ்சித்தளை ஈ) இயற்சீர் வெண்டளை.

34. பொருந்தாக் காதலால் வரும் திணை

அ) கைக்கிளை ஆ) பெருந்திணை

இ) பாடாண் திணை ஈ) பொதுவியல் திணை.

35. கிளை மடமடவென முறிந்தது.

அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி

இ) ஒருபொருள் பன்மொழி ஈ) குறிப்பு வினைமுற்று.

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ***ஆறனுக்கு*** மட்டும் விடையளி : 6 × 2 = 12

36. சார்பெழுத்து எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

37. வியங்கோள் வினைமுற்று எவ்வெவப் பொருளில் வரும் ? எடுத்துக்காட்டுகள் தருக.

38. பெயரெச்ச வாய்பாடுகள் யாவை ?

39. வழுவமைதி என்றால் என்ன ?

40. அடுக்குத்தொடர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

41. அறிவினா என்றால் என்ன ? அதன் நோக்கங்களைச் சுட்டுக.

42. விடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

43. ஒருபொருள் பன்மொழி என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

ஆ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***ஆறனுக்கு*** மட்டும் விடையளி : 6 × 2 = 12

44. பைங்கூழ் - எவ்வாறு புணர்ந்தது ?

45. முல்லைக்குரிய சிறுபொழுது பெரும்பொழுதுகள் யாவை ?

46. புறத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

47. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ?

48. 'உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்' - இதில் பயின்றுள்ள அணியைச் சுட்டுக.

49. பிரிமொழிச் சிலேடை *அல்லது* தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

50. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக :

"நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்
பகையும் உளவோ பிற".

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : 5 × 2 = 10

"மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன் குளிர்ந்த தென்றல் வந்தது
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது
வாசம் வந்த வசத்திலே திரும்பினேன்
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன்; மகிழ்ச்சி கொண்டேனே.

*வினாக்கள் :*

அ) மாலைப் பொழுதில் கவிஞர் எங்கு சென்றார் ?

ஆ) குளிர்ந்த தென்றலில் கமழ்ந்தது யாது ?

இ) முல்லை மலர்க்கொடியைக் கவிஞர் சோலையில் எப்பகுதியில் கண்டார் ?

ஈ) முல்லை எவ்வாறு சிரித்ததாகக் கவிஞர் கூறுகிறார் ?

உ) கவிதைக்கு ஏற்ற தலைப்பு ஒன்று தருக.

VII. 52. உன் குடியிருப்புப் பகுதியில் நூலக வசதி அமைத்துத் தர வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக. $1 \times 10 = 10$

*அல்லது*

விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்று** குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : $1 \times 10 = 10$

அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பும் மாணவர் பங்கும்

ஆ) காலத்தை வெல்லும் கணினி

இ) நான் விரும்பும் கவிஞர்.

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்றனுக்கு** மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : $1 \times 10 = 10$

அ) சபேசன் காப்பியின் வளர்ச்சியும், ரகசியமும்.

ஆ) 'கரையான் புற்றெடுக்க கருநாகம் குடிவந்தது' - இப்பழமொழியைக் கொண்டு இக்கதையை ஆய்க.

இ) அப்பாவு கணக்கில் 35 ரூபாய்.

ஈ) மண்ணாசை — பட்டாளத்தார் தோட்டம் வளர்த்த முறையை விளக்குக.